செ.வெ.எண். 12 நாள் - 10.11.2020

# நீலகிரி மாவட்டத்தில் முகக்கவசம் அணியாதவர்களிடமிருந்து ரூ.10700/- மற்றும் தடை செய்யப்பட்ட 33.700 கி.கி எடை கொண்ட பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்து, அபராதத் தொகையாக ரூ.72900/- ஆக மொத்தம் ரூ.83600/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப. அவர்கள் தகவல்

---

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கூடலூர், நெல்லியாளம் நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 4 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய 4 மண்டலங்களில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தை தவிர்ப்பது பொது இடங்களில் குப்பைகள் கொட்டுவதை தவிர்ப்பது மற்றும் சாலை ஓரங்களில் உள்ள கடைகளில் தடை செய்யப்பட்ட குடிநீர் பாட்டில்கள் மற்றும் குளிர்பான பாட்டில்கள் விற்பனை செய்வதைத் தவிர்ப்பது தொடர்பான விழிப்புணர்வினை வியாபாரிகள், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 08.11.2020 அன்று ஒட்டுமொத்த கள ஆய்வு (Mass Campaign) மண்டல அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக உதகை, குன்னூர், கூடலூர் மற்றும் கோத்தகிரி ஆகிய 4 மண்டலங்களில் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் துணை ஆட்சியர் நிலை அலுவலர்கள் குழுக்களாக பிரிந்து, மாவட்டம் முழுவதும் கள ஆய்வு மேற்கொண்டனர். இக்குழுவினர் ஆய்வின் போது, முகக்கவசம் அணியாதவர்களிடமிருந்து ரூ.10700/- மற்றும் தடை செய்யப்பட்ட 33.700 கி.கி எடை கொண்ட பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்து, அபராதத் தொகையாக ரூ. 72900/- ஆக மொத்தம் ரூ.83600/- வசூல் செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் வியாபாரிகளும், பொதுமக்களும், சுற்றுலா மற்றும் வெளியூர் பயணிகளும் தடை செய்யப்பட்ட குடிநீர் பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துதல் பொது இடங்களில் குப்பை கொட்டுவதை தவிர்க்கவும் பயணிகள் நலனுக்காக நிறுவப்பட்டுள்ள குடிநீர் வழங்கும் இயந்திரத்தை (Water ATM) பயன்படுத்தி நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை பாதுகாத்திட ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட திவ்யா, இ.ஆ.ப. அவர்கள் கேட்டுகொண்டுள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்